குயில்

பதிவெண் : எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 2-9-58 செவ்வாய் | இசை: 14

அறிவு பெற வருக தமிழ்!

வண்ணம்

தனன தனணு தனன தனணு
தனன தனணு தன தாணு

அழகு முகிலே தவழும் மலைமேல்
அருவி ஒருபால் இசையோடே
அமிழும்! அதிலே சிதறு துளிபோல்
அணிம லரெலாம் எழும்மேலே

எழுதும் முழுதோ வியமும் நிகரோ
எனவு றைகுவார் மடவோரே
எறிக வணிலே குருவி கடிவார்!
இனிய மொழிசேர் தமிழ்நாடே

தழைவு பெறவே வருக தமிழே
தமிழர் உயிரே வருவாயே!
தழுவு குழல்யாழ் கிளிமொ ழியுமோர்
அமிழ்தும் உனையே நிகர்ஆமோ?

விழியின் ஒளிநீ எமது புகழ்நீ
விரிதி ருவுநீ எனயாமே
விழைவ தறிவாய் அறிவு பெறவே
விரைவில் வருவாய் ஒரு தாயே!

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

முகம்

இது வடசொல் என்று வம்பு புரிந்தார்கள் பல்லாண்டுகளின் முன்! அப்போதே இது தூய தமிழ்ச்சொல்லே என்று பேராசிரியர் கா. சுப்பிர மணியப்பிள்ளை M. A. M. L. முதலியவர்கள் எடுத்துக்காட்டி மறுத்தார்கள். ஆயினும் ஏமாற்றும் பார்ப்பனரும் ஏமாறும் தமிழர்களும் மலிந்துவரும் இந்நாளில் மீண்டும் அதுபற்றி ஆராய்வது பொருத்தமேயாகும்.

முன் என்பதன் திரிபே முகம். எனவே முகம் என்பதற்கு முன் என்பதே பொருள் என்க. முகம் என்ற இச்சொல், நூற்றுக்கணக் கான தமிழ்ச்சொற்களின் உள்ளுறுப்பாகவே அமைந்திருப்பதும், பழங்காலந் தொட்டே அமைந்திருப்பதும் நோக்கற்பாலன.

முகமன் — முன், சிறப்புக்கூறல், முகப்பு- ஆசை, வீடு இவற்றின் முன்னுறுப்பு. முகசு, முகசம் முன்னே சிறந்து காணப்படும் பல். முகதா — முன் னி லை. முகருதல் — முன்னுலி ருந்து மணத்தை உட்கொள்ளல். முகவுரை— முகவுரை, முன்னால் உரைக்கும் உரை. இதை வடவர் எடுத்தாண்டார்கள் வழியின்மையால் போலும்.

எனவே, முகம் தூய தமிழ்ச்சொல் என்று முடிக்க.

காரணம்

இது தமிழ்ச் சொற்றொடர்:

கருமை + அணம் = காரணம் ஆயிற்று. மையீறு போதலும் ருகரத்தின் மேலுள்ள உகரம் போதலும், முதல் நீளலும் தமிழிலக் கணச் சட்டம்.

எனவே, கார் + அணம் = காரணம் ஆயிற்று. கருமையின் வேற்றுமையான் உற்ற கார் என்பதற்குப் பொருள் முதன்மை. அணம் அணுவுவது அஃதாவது நெருங்குவது. முதன்மையை நெருங்குவது என்ற பொருளில் அமைந்ததாகும்.

காரியம்

கார் + இயம் = காரியம்: கார் முதன்மை. இயன்றது என்பது இயம்என வேறுபாடுற்றது. காரணத்தால் இயன்றது காரியம் என்க. காரணமே காரியம் என்னும் கபிலர் எண்ணூலை யும் எண்ணுக.

காரியம் தூய தமிழ்ச் சொற்றொடர். காரணம் காரியம் இரண்டையும் வடமொழி யாளர்கள் எடுத்தாண்டார்கள் வேறுவழி யின்மையால்.

கடிகை

இது கடிகா என்ற வடசொல்லின் சிதை வாம். இவ்வாறு கூறுவார் பார்ப்பனரும் ஏய்ப் பனரும்.

கடி என்பதற்கு எத்தனை பொருள்கள் உண்டு?

கடி — வியப்பு, அளர், அச்சம், அழகு, இடுப்பு, இரப்போர் கலம், இன்பம், சினப்பு, ஐயம், ஒழிக்கை, ஒளி, ஓசை, கடிதமும்பு, கரிப்பு, திருமணம், களிப்பு, கால நுட்பம், காலம், காவல், கூர்மை, கைப்பற்றல், சிறப்பு, சிறுகொடி, விரைவு, ஓசை, பூங்கா, நீக்கல் பேய், பிணம், புணர்ப்பு, புதுமை, பொழுது, மிகுதி, மணம் விளக்கம்.

இங்குக் கடி என்பது கால நுட்பத்துக் கானது. கடி வினைத்தன்மை அடைந்து கை தொழிற்பெயர் இறுதிநிலைபெற்றது. நாழிகை என்பது பொருள். எனவே, கடிகை வடசொல் என்பது கரடி. அது தூய தமிழ்ச்சொல்.

கடிகாரம்

இது கடிகா யந்திரம் என்பதன் திரிபென்று கதைப்பர்.

கடிகை ஆர்வது — காட்டுவது — ஈற்றுத் திரிவுற்றது.

எனவே கடிகாரம் தூய தமிழ்ச்சொல்லே.

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ ஆவணி ௧௭.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் III

டாக்டர் சட்டர்ஜி முன்னுரை

சென்ற வாரக் குயிலின் தலைங்கத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் திராவிட மொழி ஆராய்ச்சிக் குழுவின் அமைப்பைத் தெரிவித்திருந்தோம். அதில் தலைவராகத் தேடியமைக்கப்பட்டிருக்கும் டாக்டர் சுனித் குமார் சட்டர்ஜியின் போக்கும், அவர் மேற்போட்டுக் கொண்டிருக்கும் சமத்கிருதப் பறையடிப்பும், மற்றும் பலவும் சொல்லியிருந்தோம்: அவரை முன் வைத்தே தமிழை ஒழித்துக்கட்டிக் கூலி பெற வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு திரியும் கோடாரிக்காம்புகள் இன்னினார் என்பதையும் சொல்லியிருந்தோம்.

இத் தலையங்கத்தில் டாக்டர் சட்டர்ஜி முன்னுரையிற் சில பகுதிகளை எடுத்துக்காட்டி அவர் முகத்திரையைக் கிழித்தெறிய எண்ணுகின்றோம்.

சென்ற ஏப்ரல் 1957வாக்கில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் – ஷெ திராவிடமொழியாராய்ச்சிக் குழு முதலாவதாகக் கூடியது. அக்குழுவின் தலைவர் டாக்டர் சுனித் குமார் சட்டர்ஜி அல்லவா? அவர் தலைமையுரை - முன்னுரை கூறவேண்டுமல்லவா? அவ்வாறு அவர்கூறிய முன்னுரை 34பக்கங்கள் கொண்ட நூலாக அச்சிட்டிருக்கின்றார்கள்; தமிழில்அல்ல; மலையாள மொழியிலல்ல; கன்னட மொழியிலல்ல; தெலுங்கு மொழியிலல்ல. திராவிட மொழிக் குடும்பத்திற்குத் தொடர்பில்லாத ஆங்கிலத்தில்தான் அந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம்? திராவிடமொழிகள் ஒன்றையும் காதால் கேட்டதுமில்லை சட்டர்ஜி.

இவ்வாறு வெளியிடப்பெற்ற நூல்கள் எத்தனை என்றால் ஆயிரக் கணக்கில்! வெளியில் தலைகாட்டிய படிகள் எத்தனை என்றால் பதினைந்தே! மீதியாக உள்ள படிகள் எல்லாம் எங்கே என்றால், மீனாக்கி அழகும், சேதுவும் ஆகிய இருபிள்ளைகளும் தங்கள் வீடுகளின் - பின்கட்டில் உள்ள அறையில் அடுக்கி வைத்துக் கொண்டார்களாம். நல்ல வேலை செய்தார்கள்! வெளியில் மலிந்தால் தமிழர்களின் மூளையைக் கலக்க நேருமல்லவா? நஞ்சு கலப்பது, ஊசி மருந்தாக்குவது, ஊசி ஏற்றுவது, ஒட்ட உயிரை மாய்ப்பது, சுடுகாட்டில் சுடுவது, சாம்பலைக் குவிப்பது ஆகிய செயல்களை எல்லாம் திரை மறைவில் செய்து முடித்துக் கொண்டு, சாம்பலின் குவியல் மேல் ஏறி நின்று கொண்டு,

> எங்கள் காட்டிக் கொடுக்கும் திருப்பணிக்கு வெற்றி! ஒழித்தோம் தமிழன்னையை, ஒழித்தோம் தமிழ் மேன்மையை, ஒழித்தோம் தமிழர் துடுக்கை, நாங்கள் மக்களினத்தைச் சேர்ந்தவர்களா? இல்லை இல்லை ஈடும் எடுப்பு மில்லாத ஓநாய்ப் பிறப்புக்கள்! மீனாக்கி அழகு என்றும் சேது என்றும் பிறந்த பிள்ளைகள் நாங்களா? இருகொள்ளிக் கட்டைகள்.

என்று முடிவுக் கூத்தாடுவார்கள். அதற்குள் படிகளை நரிச் செயல்களை வெளியிடுவார்களா? வெளியிடக் கூடாதல்லவா?

முன்னுரை தொடங்குகின்றார் சட்டர்ஜி ஆனால் அந்த முன்னுரை திராவிட மொழியாராய்ச்சி முன்னுரை யில்லை. அதற்கு - முற்றும் மாறான ஒன்று பற்றிய முன்னுரை.

அவர் சொன்னது: திராவிட மொழி ஆராச்சியை இரு கூறாகப் பிரித்து நடத்தலாம் ஒன்று திராவிட மொழிக்குள்ளேயே ஆராய்ச்சி

இராசாசி தமிழ் படித்தால்
வராத வெண்பாவும் வரும்

வேண்டியா நந்த விகடன் வெளியிட்டான்
தாண்டியாச் சாரிதந்த தப்புவெண்பா! — ஈண்டே
இவாள்தவறி ஞலும் அவாள்திருத்த லாமே?
அவாளுக்கி வாள்எழுந்துண் பாள்.

இராசாசி தப்பு வெண்பா.

மூதுரைவேல் தூக்கி மொழிப்போரில் முன்சென்று
குதுரைகள் அத்தனையும் தோற்கடித்து — தீதறவே
நாமடைந்த ஆங்கிலமே நன்மருந்து எனஓதி
நாடறிய ஔவையின்சொல் நாட்டு.

தோற்கடித்து + தீது = இடையில் த் வரவேண்டும். நன் மருந்து எனஓதி, இதில் புணர்ச்சிப்பிழையும், தொடைப்பிழையும் ஆயின. மூன்றுமடியின் நாமடைந்த என்பதற்கு நான்காமடியின் நாடறிந்த என்பது எதுகைப்பிழை ஆயிற்று.

நடத்துவது; மற்ளுென்று: திராவிட மொழியை யும் வட மொழியையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி நடத்துவது.

பயிருக்குக் களை பிடுங்க வந்த சட்டர்ஜி பயிரை மேயவரும் காளைக்கும் அண்ணுந்தாள் கழற்றப் போகிறுராம்.

நேரே செல்ல மனமில்லை சட்டர்ஜிக்கு தம் மூர்க்குச் செல்லும் கொடி வழிக்கு வழி காட்டுகிருர். திராவிடமொழியாராய்ச்சி என்ற தலைப்பை விட்டு எங்கேயோ ஓடுகிருர். முன் னுரையே மற்ளுென்று விரித்தலாகிறதல்லவா!

என்ன அழகாக முடிச்சவிழ்க்கின்ருர்! இன்னுங் கேளுங்கள்.

முற்காலந் தொட்டு ஆரியர்களும் திராவிடர் களும் வெளிநாடுகளிலும் இந்தியாவிலும் தொடர்பு கொண்டிருந்தார்கள், என்கிருர் சட் டர்ஜி. இதனுல் சட்டர்ஜி சொல்ல வருவது என்ன வெனில்,

திராவிடரும் வேறுநாட்டிலிருந்து இங்கு ஆரியர் போல வந்தவர்களே என்பதாம். இன்றைக்குப் பார்ப்பனரால் மாற்றியமைக்கப் பட்டுவரும் இந்திய வரலாற்றை உறுதி செய் கிருர் சட்டர்ஜி! ஆரியர் இங்கு ஆடு மாடுகள் ஓட்டிக்கொண்டு வந்தவர்கள் என்ற உண்மை, சட்டர்ஜிகளுக்கு இழிவைஉண்டாக்குகின்றது. தமிழரும் அவர்போலவே வந்தவர்களே என்று கூறுவதில் சட்டர்ஜிகளுக்கு ஒரு மகிழ்ச்சி.

இப்போது ராஜகோபாலாச்சாரி கூட்டம் புதுப்பல்லவி தொடங்கியதில் நாமெல்லாரும் வியப்படைந்தோம். அவர்கள் சொல்லுவார்கள் ஆரியர் திராவிடர் என்ற பிரிவு - கலந்துபோய் விட்டது என்று.

அதையும் சட்டர்ஜி, தம் முன்னுரையில் குறிப்பிட்டுவிட்டார். மேலும் சட்டர்ஜி ஆரியர் திராவிடர் சண்டைக்கு வழியில்லை இந்து மதத்தை எல்லாரும் ஒத்துக்கொண்டதன் வாயி லாக ஓர் ஒற்றுமைக்கு வந்துவிட்டார்கள் என்றும் முடிக்கிருர். திராவிட மொழியாராய்ச்சி பற்றிப் பேச எழுந்தவர், ஆரியர் திராவிடர் பற்றிப் பேசிவிட்டு இந்து மதப்பறை முழக்க மும் செய்து மனநிறைவு பட்டுக்கொள்ளுகிருர்.

இவர் முன்னுரை நூலை ஆங்கிலத்திலுள்ள தைப் படிக்கும் ஒவ்வொருவரும் ஏமாந்து போகும்படி இவர் மொழிநடை அமைந்திருக் கிறது. ஆனுல் அந்த நடைக்குள் இவர் நெஞ்சம் புலனுகாமற்போகவில்லை.

(தொடரும்)

தென்னந்தோப்பு

சின்ன தோப்பு – நல்ல
தென்னந் தோப்புத் - தரும்

முன்னும் பின்னும் நல்ல காய்ப்புக் - குடும்ப
முன்னேற் றத்துக் கொரு வாய்ப்பு
மோடான மோடி வானத்தி லோடிக்
காடாகி ஓலை பச்சென்று வளர்ந்த

சின்னதோப்பு

இன்னிள நீரும்
தின்னத் தேங்காயும்

பின்னிப் பின்னிப் போடும் கீற்றும் - கொடுக்கும்
என்வீடும் தென்னையின் தோற்றம்!
ஏராளமாய் நாரும் கொடுக்கும்
வாரை கொடுக்கும் பட்டையும் கொடுக்கும்

சின்னதோப்பு

கட்டிவிட்ட பாளை
தித்திப்புச் சாறு.

தொட்டி இட்டுக் காய்ச்சும் வெல்லம் - நல்ல
கொப்பறை கொடுக்கும் செல்வம்.
காத்திடும் கூரைக் கீற்றும் கொடுக்கும்

சின்னதோப்பு

சிட்டுக்கள் பாடும்
தென்றலும் ஆடும்

குட்டை யிலேபூ பூக்கும் - நல்ல
எட்டுத் திக்கும் மணம் தூக்கும்
இல்லா தவரை உழைப்புக் கேட்கும்
நல்லா தரவு கொடுத்துக் காக்கும்

சின்னதோப்பு

அம்மை

"சித்தன்"

அம்மையெனுங் கொடுநோயை ஆக்கும் பூச்சி
அறிந்தொழிக்க நிபுணர்பலர் ஆய்ந்தார் பல்கால்!
செம்மையுற அணுப்பிளந்த மேனாட் டார்இச்
சிறுபுழுவின் திறலழிக்கத் திறனற் றார்கள்!
வெம்மையினில் அணுவணுவாய் உடல்நீயத் தேபின்
விடாதுடலில் நாற்பதுநாள் வீற்றி ருக்கும்
அம்மையணு "வரியோலா" என்பர்; மாரி
அம்மைதமிழ் நாட்டாரின் அன்புப் பேரே!

1. அணு: இங்கே நுண்மையான புழு
2. வரியோலா மேனாட்டாரிப் புழுவிற் கிட்ட பெயர்.

தடுப்புமுறை

நோயுடையார் உறங்குமிடத் துறங்கல். செல்லல்,
நுகர்ந்தபொருள் தொடல்.உண்ணல் ஆகா; அன்னார்
பாயுடைகள் தீயிடுக! எங்கும் வேம்பின்
பச்சிலையைப் பரப்பிடுக! கிருமி சாகும்!
சேயுடைய தாயேனும் சேர்தல் தீதாம்!
தெரு.வீடு தூய்மைசெய்! திடத்த ரேனும்
ஈயுடையார் நோயுடையார் அறிக! அம்மை
இடர்பரவா திருக்கவழி இவைகள் சொன்னேன்!

வேம்பின் பெருமை

மக்கள்பலர் கூடுமிட மெல்லாம் முன்னாள்
மாந்தளிர்.வேப் பிலைதூக்கி மணக்கச் செய்வர்!
அக்கால ஒப்பனைகள் கிருமி கொல்லும்
அருங்கருத்தில் ஆக்கியவை; இந்நா ளிங்கே,
முக்காலும் காகிதத்தால் தோர ணங்கள்!
முதிர்அறிவால் விளைந்தபயன் இதுகொல்! பித்தர்.
எக்காலும் நுகரநலங் கொள்வர் - வேம்பை!
இதனால்மந் திரஞ்செய்வோர் இதைக்கை யேற்றார்!

வேப்பிலையின் பெருவன்மை வியத்தற் கொன்றும்!
வேம்போடு தொடர்புகொளல் மிகவும் நன்றாம்!
வேப்பிலையோ அம்மைப்பேய் வீறு மாய்க்கும்!
விடக்கிருமி படத்தேய்க்கும்; மலடு போக்கும்!
வேப்பிலையோ பலநோயை விரட்டும்; தீரா
விடந்தீர்க்கும்; தொழுநோயை விண்ணுக் கேற்றும்!
வேப்பிலையின் நற்காற்றே மூளைக் கின்பம்
விளைக்கும்;இதைக் கடவுளெனில் வியப்பும் உண்டோ?

—*—

★★★★★★★★★★★★★★★★

வரப்போகிறதாம்!

★ ★ ★

கேரள மந்திரிசபைமீது
நம்பிக்கையில்லாத் தீர்மானம்
கொண்டுவருவது பற்றி
கம்யூனிஸ்டுகள் அல்லாத
பிற கட்சிக்காரர்கள்
ஆலோசித்து வருகிறார்களாம்.

இந்தச் செய்தியைக்
கேரள சட்டசபை
எதிர்க்கட்சியின் துணைத்தலைவர்
"உமர்கோயா" என்பவர்
வெளியிட்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி எ.

இடம் : பிசிராந்தையார் ஊராகிய பிசிர், சோலே.

நேரம் : மாலே.

உறுப்பினர் : பிசிராந்தையார், மேற்படியார் என்னும் புலவர், உருமாறியுள்ள சோழ இளவரசு சோழநாட்டார் இருவர். பாண்டி நாட்டான் ஒருவன்.

காட்சித் தலேப்பு :

அச்சப் பலகை ஆனேயைத் தாங்குமா?

நிகழ்ச்சி : மேற்படியாரும், பிசிராந்தையாரும் பேசியிருக்கிருர்கள். ஓடையைத் தாண்டி வரமுடியாத யானே, தாண்டிவர ஒருபலகை போடப்பட்டது. யானே அதன் மேல் வரும் நேரம்.

மேற்படியார்– எல்லாரும் நல்லவர் எல்லாரும் செல்வர்ஆகும் நிலேயை உண்டாக்கினீர்கள் ஐயா!

பிசிராந்– அரசர் துணேயால்.

மேற்படியார்– அதை யார் மறுப்பார்! அப்படிப்பட்ட நிலேயை உண்டாக்கிய நீங்களே, அதைத் தலேகிழாக்க எண்ணுகின்றீர்களா?

பிசிராந்– தீயாரும் சிலர் இருக்கத்தான் வேண்டும், வறியரும் சிலர் இருக்கத்தான் வேண்டும் என்று எண்ணியதுண்டு. சொல்லியதும் உண்டு.

மேற்படி : எல்லாரும் நல்லவர் எல்லாரும் செல்வர் என்ற நிலேயே நீடித்தால் வரும் இழுக்கு என்ன?

பிசிராந் : நீடித்தது. ஏற்பட்ட நன்மை என்ன?

மேற்படி ; நன்மை இல்லே என்ரு சொல்லுகின்றீர்கள்.

பிசிராந்: நன்மையில்லே அதனுல் தீமைதான் ஏற்பட்டது என்று கூறுகின்றேன். இதில்நீர் வியப்படைவது கண்டு வியப்படைகின்றேன்.

[illegible] விரிவாகச் சொல்லுகின்றேன். எல்லாரும் நல்லவராகி விட்டார்கள் எல்லாரும் செல்வராகி விட்டார்கள் இதனுல் மக்கள் உள்ளம் மென்மை அடைந்துவிட்டது. பகைவராலோ இயற்கையாலோ ஏற்படும் துன்பத்தை - ஒரு சிறிதும் தாங்கமாட்டாதவராகிவிட்டார்கள். இது மட்டுமன்று. முக்குணங்களின் மாறுபாட்டால் மக்கள்உள்ளத்தில் திடீரெனநன்மை செய்வதும் தீமைசெய்வதும் ஆகிய கோளாறுகள் ஏற்படும். தீமை படையெடுக்கும்போது அதைத் தடுத்துத் தன்னே காத்துக்கொள்ளும் வன்மையும் இல்லாதொழிந்தது.

மேற்படி– எனவே எல்லாரும் நல்லவர் எல்லாரும் செல்வர் என்ற நிலேமையால் மக்கள் உள்ளம் மெல்லிதாகிவிட்டது வரும் துன்பத்தைச் சிறிதும் தாங்கவில்லே என்றீர்கள் இது எனக்கு விளங்கவில்லே,

(திடும் என ஓர் ஓசைகேட்டு இருவரும் திரும்புகின்ருர்கள். ஓடையைக் கடந்த யானே, அந்த ஓடைமேலிடப்பட்ட பலகை முறியத் திடும் என ஓடையில் விழுகிறது.)

பிசிராந் : அச்சப் பலகை ஆனேயைத் தாங்கவில்லே மேற்படியாரே!

மேற்படியார்: நல்ல எடுத்துக்காட்டு மெலிந்த உள்ளம்வெம்மையைத் தாங்காது. விளங்கிற்று.

பிசிராந்– தீயவர் சிலரும், வறியர் சிலரும் தோன்றத்தான் வேண்டும் என்று ஏன் சொன்னேன் எனில், இவ்வாறு தீயவர் சிலரும் வறி

யர் சிலரும் நாட்டில் தோன்றினுல் வாழ்க்கையில் சுவைப்பகுதி இது. சுவையற்ற பகுதி இது என்று உணரமுடியும். அதுமட்டுமல்ல அப்போதுதானே இன்னும் என்னவேண்டும் மக்களுக்கு என்று நமக்குப் புரியும்.

மேற்படி : எல்லாரும் நல்லவர் எல்லாரும் செல்வர் ஆகிவிட்டார்கள் அவர்கட்கு இன்னும் என்னவேண்டும்.

பிசிராந்- வல்லமை வேண்டும்.

மேற்படி- ஓகோ! எல்லாரும் நல்லவர் எல்லாரும் செல்வர் எல்லாரும் வல்லவர் ஓகோ... ஓகோ...

பிசிராந்- இன்னும் இதில் உமக்குத் தெளிவு ஏற்படவில்லை போலும்!

மேற்படியாரே! இந்த நாட்டில் எல்லாரும் நல்லவராயிருந்தார்கள். எல்லாரும் செல்வர்களாயிருந்தார்கள். ஒரு தீயவன் உண்டானுன். அவன் கொலைசெய்தான் நாடே நடுங்கி அழுதது.

அவர்களின் அச்ச உள்ளம் தாங்கவில்லை திமையானையை. எல்லாரும் வல்லவர் ஆகி இருந்தால் நிலைமை என்ன ஆகியிருக்கும்? கருப்பமுடைய ஒரு மங்கையை மற்றவன் கொலை செய்யக் கத்தியை எடுப்பானு? எடுத்தான் என்ருல், அந்த வல்லவள் அவனைத் தூக்கித்தரையிலல்லவா அடித்திருப்பாள். அவள் குற்றவாளி கூட அல்லள்.

(இதற்குள் மற்றொருவன் வருகின்ருன்)

பிசிராந்தையார். யார்?

வந்தவன்: நான் பாண்டிநாட்டான். நாட்டின் இப்போதைய நிலை கண்டு துடிப்பவன் உங்களைக் கண்டு, ஓர் ஐயப்பாட்டைக் கேட்டுக் கொண்டு போகவந்தேன் என்னைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

பிசிராந்: இப்போதைய நிலைகண்டு துடிப்பவரோ நீவிர்? ஏன் துடிக்கின்றீர்?

வந்தவ: நீங்கள் துடிக்கவில்லை; உண்மை தான். நாடு துடிக்கின்றது. நான் துடிக்கின்றேன். அதோ தூக்குமரம் வாய் திறந்து கொண்டிருக்கிறது! அதோ அமைச்சரையும் கொலையாளியையும் அழைத்து வரப் போகின்ருர்கள். நீங்கள் துடிக்க வில்லை உண்மை தான் நாடு துடிக்கின்றது நான் துடிக்கின்றேன் புலவர் பெருமானே.

பிசிராந்: ஏன்? கொலையாளி கொலைசெய்த தற்குள்ள காரணத்தைக் கூற வில்லையோ.

வந்தவன்: எதையும் கூறவில்லை அதனுல்...

பிசிராந்: அமைச்சரையும் அவனையும் தூக்கில் இட்டு விடுவார் மன்னர் என்று துடிக்கின்றீரோ!

நண்பரே, கொலைசெய்தவன் அவனல்லன். கொலை செய்தவன் வேறு ஒருவன்! அவனும் நான்தான் கொலை செய்தேன் என்று ஒப்புக் கொள்வான். துடிக்காதீர், போய்வருகின்றீர்களா?

வந்தவன்: நீங்கள் பிசிருக்கு வந்து தங்கியுள்ளீர். அங்கே எழுந்தருள வேண்டும் ஐயா!

பிசிராந்: தேவையில்லை.

(போகின்ருன் வணங்கி - கண்ணீரைத் துடைத்துக் கொண்டே)

ஒருபுறம்:

பிசிராந்தையார் வேறுபுறம் – ஆலடியில் சென்று அமர, உடன் தொடர்ந்த மேற்படியாரும் அவருக்குச் சற்றுத் தொலைவில் அடக்கமாக அமர்கின்ருர். மூவர் பிசிராந்தையாரை நோக்கி வந்து வணக்கம் செலுத்துகின்ருர்கள். அவர்களில் ஒருவன் மட்டும் பிசிராந்தையாருக்கு எதிரில் உட்கார்ந்து கொள்ள மற்ற இருவரும் நின்றபடி யிருக்கிருர்கள்.

பிசிராந்: நீவிர் இருவரும் ஏன் நிற்க வேண்டும்? அமர்வதுதானே!

இருவர் க: நிற்கின்ருேமையா!

பிசிராந்: எந்த ஊர்? என்ன செய்தி?

உட்காந்திருப்பவன்: நானும் இவர்களும் சோழ நாட்டினர்.

(தொடர் 13-ம் பக்கம்)

மாங்குடி மருதனாரும் மாடல மறையவனும்

கயல்விழி

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரிக் கரையில் மறையவர் குலத்திலே தோன்றினான் மாடலன். புலவர் நாவிற் பொருந்திய வையைக் கரையிலே வேளாண் குடியிலே தோன்றினார் மருதனார்.

மாடல மறையவன் புண்ணிய நீராடக் கருதி வடதிசைக் கங்கையும் தென்திசைக் குமரியும் சென்றான். வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புனர்க்கு கங்கைத் தீர்த்தமும் குமரி நீரும் வேண்டா; வையைநீரே மெய்யைஓம்பப் போதுமென்றெண்ணி கற்பனகற்று நுண்மாண் நுழைபுலமிக்கஅறிஞராய்ப் பாண்டியன் அவைக்களப் புலவராய் விளங்கி அமிழ்தினுமினிய செந்தமிழ்க் கருவூலங்கள் சிலவற்றைத் தமிழன்னைக்குத் தந்து மகிழ்ந்திருந்தார் மருதனார்.

அறிவுப் பேராளும் பெருந்தகையும், பண்பாளருமான மருதனார் யாத்த நூலுள் 782 அடிகள் கொண்ட தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை தலைவனாகப்பெற்ற 'மதுரைக் காஞ்சி' என்னும் நூலும் ஒன்று.

தனித்தமிழ்ப் பண்பாடு பெருகியிருந்த காலத்தில் வாழ்ந்த நம் மருதனாரிடத்து முகிழ்த்த மதுரைக் காஞ்சியின் சொல்லரும் ஆற்றொழுக்கு நடையும் ஓசையின் துள்ளலும் மின்னிச் சுடர்விட்டுத்தெறிக்க வல்லன.

இந்நூல் தலையாலங்காணத்துச் செருவென்ற பாண்டியனை நோக்கி உலக நிலையாமையை எடுத்தோதி "வீடுபேறடைய முயல்க" என்று கூறுவதைக் கருப்பொருளாகக் கொண்டு மிளிர்கிறது.

வடபுலத்திலிருந்து அகப்படுத்தி வந்திருந்த கனக விசயரைச் சோழ பாண்டியருக்குக் காட்டிவரும்படி அனுப்பிய நீலன் முதலானோர் திரும்பி வந்து செழியனும் வளவனும் "புறமுதுகிட்டவரைப் பிடித்து வருதல் பெருமையன்று" எனக்கூறி இகழ்ந்தனர் என்று கூறக்கேட்ட சேரன் செங்குட்டுவன் சினத்தீ பற்றி நிற்கக் கொதித் தெழுந்தனன். அதுபோழ்து அங்குப் போந்திருந்த மாடல மறையவன் உலக நிலையாமையைச் சேரன் செங்குட்குவனுக்கு எடுத்தோதி அவனை வீடுபேறு அடைய ஆற்றுப்படுத்துகிறான்.

ஆனால் மருதனார் பாண்டியனை ஆற்றுப்படுத்துவதற்கும், மாடலன் செங்குட்டுவனை ஆற்றுப்படுத்துவதற்கும் உள்ள வேறுபாட்டைத்தான் நாம் உற்று நோக்கி நுணித்து ஆய்ந்துபார்த்தல் வேண்டும்.

பாண்டியன் நெடுஞ்செழியனை ஆற்றுப்படுத்துவதற்காக மருதனார் பயன்படுத்திய அடிகளின் எண்ணிக்கை 782. மாடலன் செங்குட்டுவனுக்கு வீட்டுநெறியைக் கூறுவதான சிலப்பதிகாரத்தின் அடிகள் 75 அடிகள்.

782அடி நீளமுமுள்ள ஒருபெரிய நூலை இயற்றி அதில் மிகச்சுருங்கிய சில வரிகளில் அவனுக்குக் கூறவேண்டிய அறங்களை மிக நுண்மையாகப் புலப்படுத்துகிறார் மருதனார், இதில் வீடுபேறுபற்றிக் கூற எழுந்த அடிகள் பதிநான்கு. (206, 207. 208, 236, 237, 238, 761, 762, 763, 764, 765, 780, 781, 782) எஞ்சிய அனைத்தும் நெஞ்செழியனது முன்னோரதுநல்லியல்புகளும் கொடை மறம், பண்பு மதுரையின் வளம் முதலியவைகளாக அமைந்துள்ளன.

மாடலன் கூறுவதாக அமைந்த 75 அடிகளில் வாழ்த்தாக அமைந்த அடிகள் பதினேழு. எஞ்சிய அனைத்தும் அவனுக்கு வீட்டு நெறியை உணர்த்த முற்பட்டபொழுது மிரட்டவும், மருட்டவும் அச்சுறுத்தவும் பயன்பட்ட அடிகள் என்று கூறினால் அது மிகையாகாது.

சேரன் செங்குட்டுவன் ஒரு பேரரசன். அவனிடம் பழகுவோரோ 'அகலாது அணுகாது தீக்காய்வார்'போலப் பழகுதல் வேண்டும். மதுரை உற்ற நிலையையும், பாண்டியனது உயிர்ப்பிரிவையும் கூறவந்தவன் சிறிது காலமே செங்குட்டுவனிடம் பழகியிருந்தான். எனினும் அச்சிறு நாட்பழக்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு வீட்டுநெறி கூற ஆரம்பித்தான் செங்குட்டுவனுக்கு.

வாளும் வேலும் தாங்கிப்பொருதல் செங்குட்டுவனின் வீரம், மாற்றாருக்குக் கூற்றுவனாய் நின்ற செங்குட்டுவனின் வீரம், மறையோனின் வாய்மொழி முன்பு அப்படியே மகுடிவாய் மடுத்த நாகம் போல் அடங்கிவிட்டது.

வீடுபேறு அடையும்படி மாடலன் செங்குட்டுவன் ஆற்றுப்படுத்தியது குற்றமல்ல. ஆயின் எம்முறையில் ஆற்றுப்படுத்துகிறான் என்பதைத்தான் நாம் கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

தகுதியால் சிறிது கீழ்நிலையிலுள்ளோர், தகுதியால் மேம்பட்டோருக்கு ஒரு கருத்தையோ அல்லது எண்ணத்தையோ சொல்ல முற்படும்பொழுது மிக்க வணக்கத்துடனும் பணிவுடனும் நல்லன கூறுதல் உலகியல்பு. அறிந்தோரின்செய்கையாகும்.

மாடலன் என்ன சொல்கிறான் (மன்னிக்கவும் கட்டளையிடுகிறான்) தெரியுமா? "நீ வேள்வி செய்தல் வேண்டும்." அதுவும் எவ்வாறு செய்தல் வேண்டும்; "நான்கு வேதங்களையும் ஓதுகின்ற வேள்விப் பார்ப்பானைக் கொண்டு நீ யாகம் வேட்டல் வேண்டும்," என்று கூறுகிறான். அந்த அடிகள் பின்வருமாறு.

> **நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்**
> **அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய**
> **பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்.**
> *(நடுகற்காதை 176-178)*

மருதனாரும் நெடுஞ்செழியனை நோக்கிக் கூறுகின்றார். என்ன கூறுகிறார்? வேள்வி வேட்க வேண்மென்றோ? அல்லது நீ வீடுபேறடைய இவ்வாறுதான் வாழ்ந்து திரவேண்டுமென்று கட்டளையிட்டா? மிக மிக அழகாக, சுருக்கமாக "கெடுகநின் அவலம்;" (மதுரைக்காஞ்சி 208) அதாவது உன்னிடத்துள்ள மாயை கெடுவதாக" என்று கூறுகிறார். இது மாடல மறையோன் போன்று கட்டளையிடும் சொற்களா? அன்றிப் பணிப்பா? வாழ்த்து. வாழ்த்துடன் அவ்வரசனே தெளிந்து திருந்துவதற்கு ஏற்ற புத்திமதி.

மருதனார் பாண்டியன் அவைக்களத் தலைமைப் புலவர் பாண்டியனோடு நெடுங்காலம் தொடர்பு பூண்டு நெஞ்சத்து அகநக நட்ட நட்பாளர்கள். அரசனை நோக்கி, "நீ இவ்வாறுதான் ஒழுகுதல் வேண்டும்" என்றுகூறும் அளவுக்கு உரிமையுள்ளவர். இருந்தும் வீடுபேற்றைப் பற்றி அரசர்க்குணர்த்தும் பொழுது எவ்வளவு நாகரீகமாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இவரது பண்பல்லவா பண்பு. இவரது பெருந்தகவுடைமைக்கும் உலகியலறிவிற்கும் இந்த ஒரு கூற்றே தக்க சான்றல்லவா?

சிலநாள் சேரனிடம் பழகிய மாடலன் கூறிய கூற்றையும் பலநாள் பாண்டியனுடன் தொடர்பு பூண்ட மருதனார் கூற்றையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது பார்ப்பானுக்கு இடங்கொடுத்தால், தலைக்குமேல் ஏறுவான் என்பதுதானே தெரிகிறது.

இனி, மருதனார் மதுரைக்காஞ்சியில் ஓரிடத்திலாவது நீ வேள்வி செய்தல் வேண்டும் என்று குறிப்பிடவில்லை. வீடுபேற்றிற்கு வேள்வியை இன்றியமையாததாகக் கருதியிருந்தால், வேள்வி இவருக்கு உடன்பாடாயிருந்தால், வீடு பேற்றுக்காகவே நூல்யாத்த மருதனார் அதுபற்றி ஒன்றும் கூறாது விடுத்துச் செல்வாரா?

பார்ப்பனனைக் கொண்டு வேள்வி செய்தல் வேண்டும் என்ற அளவோடு மாடலன் விட்டானா? "நீ வேள்வி செய்யாவிடில் மனிதஉடலுள் நுழைந்திருக்கும் உனதுஉயிர் அடுத்தபிறவியில் விலங்குடலில் நுழையினும் நுழையும்" என்று மருட்டவும் தயங்கவில்லை. அரசே விலங்கிலிருந்து பிரியும் அந்த உயிரும் மேன்மையுறாது. நரகர்துஉடலில் அந்த உயிர் புகினும் புகும்" என்றான்.

மாடலன் இவ்வாறு கூறும்பொழுதே செங்குட்டுவனது முகத்தைக் கூர்ந்து நோக்கியிருப்பான் இன்னும் அவன் தன்வழிக்கு வரவில்லை என்பதை முகக்குறிப்பால் அறிந்து "இப்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்கபடிதான் மற்ற பிறவிகள் அமையும்" என்று அச்சுறுத்திப் பார்க்கிறான். நல்வினை தீவினைக்குத் தக்கபடி என்று கூறியவன் முதலிலேயே நீ நல்வினை செய்யவில்லை. தீவினைகளையே செய்துவந்திருக்கிறாய் என்று கூறியிருக்கிறான். "திவினை செய்த நீ, நல்ல பிறவி எடுக்கமுடியாது" என்று கூறாது கூறும் அவனது சூழ்ச்சித்திறனை நோக்குக.

மருட்டி நெருங்குவது பயன் தராமற் போகவே பரிவுரை காட்டுமுகத்தான் கூறுகிறான். "நீ வேள்வி செய்யாவிடில் உனதுயிர் ஏனைய சாதாரண மக்களுடைய உயிர்போன்று பொதுநெறியிடத்திற்குச் செல்லும். அவ்வாறு செல்லுதலை என்னால் பொறுக்க முடியவில்லை" என்றுகூறி அவருக்காகத் தான் வருந்துவதாக நடிப்பதையும் எண்ணுக.

கடைசிக் கணையாக ஒன்றை ஏவுகிறான். "இந்த வேள்வியை நீ நாளை செய்யலாம் என்று நினைத்தால் இன்றே உனதுயிர் உடலைவிட்டு நீங்கும். ஆகவே இன்றே நீ வேள்விசெய்" என்றான் இதற்காவது அரசன் இசைந்து விடுவான் என்றெதிர் பார்த்த மாடல மறையவன் இன்னும் அரசன் வாளாவிருக்கக் கண்டு மனம்நொந்து மறுபடியும் முயன்றான்.

உனது இல்லாள் வேண்மாளுடன்கூடி வேள்வி நடத்துஎன்றான். இதுவரை கல்லையும் கரையவைத்தது போன்ற மாடலனின் பேச்சுக்களை அரசனுழையிருந்து கேட்ட வேண்மாள் "என்னங்க இவர் சொல்றது ஞாயந்தானே. ஏற்பாடு செய்யிறது தானே" என்ற பொருள்படும்படி அரசனை நோக்கியிருப்பாள். பார்ப்பான் பேசிய பேச்சும் மனைவியின் பொருள் பொதிந்த பார்வையும் ஒன்றுசேர்ந்து அவனை வேள்விக்கு இணங்கும்படி செய்துவிட்டன. படிப்படியாக மாடலன் அரசனை எவ்விதம் தன் வசம் இழுத்திருக்கிறான் என்பதை உன்னுக.

கடந்தகாலச் சரித்திரங்கள் நமக்கு நினைவூட்டுவன என்ன? இன்னமுறையில் சென்றால் இன்ன நேரும். ஆகவே நீக்குவனவற்றை நீக்கி, வாழ்வை வண்ணமலர்ச் சோலையாக்கு என்பதையல்லவா நினைவூட்டுகிறது.

(தொடர் 13-ம் பக்கம்)

ஏன் பிரிந்தாய்?

சென்னை. ப. இராஜேஸ்வரன்

சங்கமொழிப் பேச்சழகி! அன்பே வாராய்
சதிராடும் சிலம்போசை கேட்கு தேடீ!
தங்கநிறத் துகள்பரப்பும் நிலவே! என்றன்
தனிமையினை உணராத தளிரே! அந்நாள்
சங்குபுரள் தமிழ்நாட்டு வேந்தன் மங்கை
தனியழகி அமராவின் அன்பால், வையம்
எங்கும்புகழ் கவியரசன் அடைந்த துன்ப
ஏடறிந்தும் எனைவிட்டுப் பிரிந்த தேனோ?

அந்தியிலே விண்மீது தோன்றும் வண்ண
அழகின்ஒளி வளருகின்ற கன்னந் தன்னில்
செந்துவர்வாய் இதழ்வைத்துச் சுவைத்துப் பார்த்த
இனிப்பெண்ணம் எனையெறிக்கும்! மாலைக் காலச்
சந்திரனும் இளவேனில் தென்றல் காற்றும்
சண்பகப்பூ இனத்தாளே! வாழ்வில், மேனி
சந்தனந்தீக் காற்றாலே உலர்தல் போல
சேராது எனைவிட்டுப் பிரிந்த தேனோ?

அரும்பவிழ்ந்த புதுக்கனவில் இன்பந் தேங்க
அதைவடித்து மென்நெஞ்சக் கூட்டில் சேர்த்துச்
சிறகெடுத்தும் உயர்வானில் பறந்தேன்! அய்யோ,
செந்தேனை ஏனள்ளிப் போனாய்? எல்லை
விரிகின்ற கடலலையில் கரையும் வான
வெண்கதிராய் உன்சிரிப்பு மறைய, ஆடிப்
பெருக்குப்போல் பெருகுமென் காதல் எண்ணம்
அறிந்தும்பின் எனைவிட்டுப் பிரிந்த தேனோ?

குறிப்பு:- அமரா - அமராவதி, அம்பிகாபதியின் காதல் வாழ்க்கை.

குயிலுக்கு...

பின் கண்ட ஊர்களில்
விற்பனையாளர்கள் தேவை.

செங்கல்பட்டு.	மதுராந்தகம்.
தாம்பரம்,	செஞ்சி,
விழுப்புரம்,	பண்ணுருட்டி,
திருக்கோவிலூர்,	கோவில்பட்டி,
காரைக்குடி,	குடியாத்தம்,
தென்காசி,	விருதுநகர்.

எழுவீர் இன்றே!

நாதன்

நம்மை யீன்றுயர் நாடெலாம் புகழ்ந்திடச்
செம்மையாங் கல்வியுஞ் சீரிய வொழுக்கமும்
அறமும் அறிவும் அன்புடை நெஞ்சமுந்
திறனு மாண்மையுந் திகழ்பவ ளாக்கிய
பெற்றவள் தன்னினும் பெருமைக் குரியவள்
நற்றிருத் தாயாம் நந்தமி ழல்லவோ?
அன்னவள் வாழ்வினி லன்னியர் நுழைந்தே
இன்னல்க ளிழைப்பதை யேற்பதோ நாமெலாம்?

இலங்கைத் தீவிலும் இமய வெற்பிலுந்
துலங்கிய பெருமையைத் துய்த்தவ ளாமுயர்
முத்தமிழ்த் தாய்ப்புகழ் மூடர்கட் குணர்த்திட்ட
எத்தனை யிடர்கள் எதிர்த்தே நிற்பினும்
நெஞ்சஞ் சிறிதும் நெகிழவி டாமல்
அஞ்சாத் துணிவும் ஆண்மையுங் கொண்ட
வீறுகொள் வேழமாய் வெறியுடை வேங்கையாய்
மாறுவ தன்றோ மாண்புறு பெருமை?

தமிழதன் உயரிய தனிப்புக ழெங்கணும்
அமிழ்தாய்ப் பொங்கி ஆறாய்ப் பெருகிடக்
கொந்தளித் தெழுந்தே கொடியோர் தாமும்
நந்தழிழ்த் தாய்க்குறு நலிவுசெய் வதனைத்
தடுத்து நிறுத்துவீர்; தமிழ்த்தாய்ப் புகழை
எடுத்தே யுரைப்பீர்; எத்தர்கள் தம்மால்
மண்டிய அவள்துயர் மாய்க்க,
எண்டிசை யதிர்ந்திட எழுவீர் இன்றே!

திரண்டு வாரீர்!

புதுவை. சி. எ. முகிலன்

அன்னைமொழி நமக்குமென் றுளம்தன் றின்னும்
அறியாத தற்குறிகள் மலிந்த நாட்டில்
அன்னைமொழிக் காதரவு தருவா ரில்லை,
ஆளவந்தார்க் கதுகுறித்துக் கவலை யில்லை!
இன்னிலையில் எழிலற்ற வளமை யற்ற
நுண்கலைகள் தொன்னூல்கள் ஏது மற்ற
வண்டமிழர்க் குதவாத 'இந்தி' தன்னை
வலியுறுத்தித் தமிழகத்தில் நுழைப்ப தேனோ?

தாய்நாட்டை ஆட்சிசெயத் தமிழிங் குண்டு
தரணியெலாம் ஏவல்கொள ஆங்கி லந்தான்
வாய்செத்த இந்தியினை வருந்திக் கற்றால்
வரப்போகும் பலனெதுவோ? வாழ்வு நல்கும்
தாய்நாட்டுப் பற்றொழிந்து தமிழர் எல்லாம்
தான்றோன்றி வடவருக்குத் தாள்ப ணிந்தார்
நோயூட்டும் இச்செயலை எதிர்த்தொ ழிக்க
நேர்மைமிகும் தமிழர்களே திரண்டு வாரீர்!

பைந்தமிழாய் மாறிடுவாய்!

★ கடலூர், வீ. கு. ஜீவா ★

ஏடெடுத்தால் என்எதிரில் நீவருவாய்!
எழுதநினைத்தால் என்இதயத்தில் நீநிறைவாய்
பாடநினைத்தாலோ பைந்தமிழாய் மாறிடுவாய்!
— மனம்
நாடுமெதிலும் நடுநின்று மறைத்திடுவாய்!

கதியும், நதியும் நீயல்லவோ? — உனைக்
காண, மனத்தொல்லை நான் சொல்லவோ?
மதியே; உன்மனதார எனைக்கொல்லவோ?—என்
மனக்கோவில் குடிகொண்டாய் நிசமல்லவோ?

பருவமழை யில்லாப்பயிர் போலே — கொடி
படரக்கொம் பில்லாச்செடி போலே
உருவமில்லாத உயிர்போலே — நான்
உலகினில் வாழ்வதும் எதனாலே?

மனம்ஒரு நிலையிலும் இல்லையே — அது
மாறும் நாளும்வர வில்லையே!
தினமும் வாழ்வில்சுக மில்லையே
செத்துமடிந் தால்தொல்லை யில்லையே!

அழுதழுது துடிக்கும்மனம்; அமைதி
அடைவது தான்எந்தத் தேதி? — நான்
எழுதும்எழுத் தெலாம்என்றன் ஜோதி — என்
இதயம்வடிக் கின்றதே செங்குருதி!

விற்பனையாளர்
இல்லாத இடங்களில்...

குயில் இதழைப் பெற
விரும்புவோர்
உறுப்பினராகச் சேர்ந்துகொள்க.
விற்பனைசெய்ய விரும்புவோர்
எழுதுக.

சிங்கம்போல் எழுகவே!

பட்டுக்கோட்டை, இராசேந்திரன்

செந்தமிழ் நாட்டை எந்தமிழ் மக்கள்
நன்கனம் ஆண்ட அன்றெலாம் சாதிப்
பித்தரும் பதவிப் பேயரும் தெய்வப்
பெயரைச் சொல்லி உயிர்வாழ் வோரும்
ஈங்கிலை தமிழே ஓங்கிற் றெங்கும்!

பின்னர் ஆரியர் என்னும் வஞ்சகர்
பன்னலந் தேய்வுறத் தென்னகம் நாடினர்.
ஓர்குலம் எங்கட் கோர்இறை என்ற
தமிழனைத் ''தகுமதி அமையா தானே,
விளங்குந் தெய்வம் பலவாம் குலமும்
வெவ்வே றென்''றே செவ்வையாய் வாழ்ந்த
வண்டமிழ் மக்களைத் துண்டுதுண் டாக்கினர்;
தமிழர்கள் இதனால் தமக்குள் சண்டை
போட்டுக் கொண்டனர்; காட்டித் தந்தனர்!

'நாயகர்' தமையவர் 'நாயக்க' ராக்கினர்;
'படையாட்சி' தம்மைப் 'படையாச்சி' ஆக்கினர்!

அவர்போல் சோற்றுச் சுவர்போல் தமிழருள்
அமைந்தனர் சிலபேர்! தமிழை வேறோர்
(நாற்ற) மொழியின் போற்றற் குரிய
மகவே என்று தகுமா றுரைத்தே
'இலட்சியம்' சரியாம் 'இலக்கியம்' பிழையாம்
'வேட்டி' பிழையாம் 'வேஷ்டியே' சரியாம்
'காட்சி' பெரும்பிழை 'காக்ஷி' நிறைசரி
என்றெலாஞ் சொல்வர்; குன்றும் மதியர்!

நரிகள் இவர்நம் அருமைத் தமிழை
ஒழிக்கவுந் தூற்றி இழிக்கவுந் துணிவர்!
தமிழருள் இதுபோல் அமைநஞ் சனையார்
தம்மை ஒதுக்கி அன்னைத் தமிழ்க்கு
நன்மை விளைக்க உண்மைத் தமிழர்
பண்டை இமயத் திண்டோள்
கொண்ட சிங்கக் கூட்டமாய் எழுகவே!

பிசிராந்தையார் ...

பிசிராந்: கோப்பெருஞ் சோழனர் நலந்தாமே? மங்காத மகிழ்ச்சியுடன் தங்கடமை செய்து வருகின்றாரா?

உட்காந்திருப்பவன்: அது பற்றித்தான் புலவரிடம் சொல்ல வந்தேன். இன்று தூக்கி விடப் போகின்றார்கள் ஒரு கொலையாளியை. அந்தக் கொலையாளி சோழ நாட்டான். இன்று சோழ மன்னர் ஆட்சி கொலைக்காரர்களையும் கொள்ளைக் காரரையுமே உண்டாக்கி வருகின்றது. வறுமை தாண்டிக் குதிக்கிறது சோழ நாட்டில்.

பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் போர் மூண்டால் நாம் வியப்படைவதற்கில்லை. எல்லாரும் நல்லவர் எல்லாரும் செல்வர் என்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கும் பாண்டிய நாட்டில் சோழ நாட்டான் புகுந்து நிலை கலைக்கின்றன் என்றால், இரு நாடுகளுக்கிடையில் அமைதி வாழப் போகின்றதா? இந்த நிலையை—சோழ நாட்டான் பாண்டிய நாட்டிற் சென்று நடத்தியுள்ள இந்தக் கொலையைச் சோழ மன்னன் காதில் போட்டோம் மன்னர் வருந்தவில்லை; நாணவில்லை அதற்கு மாறாகப் பாண்டியநாட்டு நிலையை அவர்தாழ்வுப்படுத்திப் பேசினர் கற்பிழந்த பெண்டிர் வாழும் நாடு பாண்டிய நாடு என்று கூறி மகிழ்கின்றார் இந்தத்திய உள்ளத்தை நாட்டு மக்கள் அறிந்து வருந்துகின்றார்கள். மன்னர் இந்த நிலையை அடைந்ததற்குக் காரணம் அவரின் முதுமையே என்று முடிவு செய்கின்றார்கள் மகனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கச் சொல்லுகின்றார்கள் அரசர் காது கொடுக்கவில்லை.

ஆட்சிக் கட்டிலில் ஒட்டிக்கொண்டிருக்கவே ஆசைப்படுகின்றார்.

பிசிராந்: அதற்கென்ன செய்யலாம் சொல்லுங்கள்.

உட்கார்: புலவர் சோழ நாட்டுக்கு வர வேண்டும். சோழ வேந்தருக்கு அறிவுரை கூற வேண்டும். நாடு நல்லணம் இருக்க வேண்டுமானல் அரசர் விரைவில் ஆட்சியை மகனிடம் ஒப்படைக்க வேண்டும்.

புலவரே, உங்கள் சொல்லுக்குச் சோழ மன்னர் பெருமதிப்பு வைப்பவர். இதை நீங்கள் செய்ய வேண்டும். சோழநாட்டைக் காப்பாற்ற வேண்டும்.

இன்று அமைச்சரைத் தூக்கில் இடாமல் காக்க வேண்டியதும் உங்கள் பொறுப்பு. அதே நேரம் கொலையாளியைத் தூக்கிலிட்டுக் கொலை செய்து தண்டிக்க வைக்க வேண்டியதும் உங்கள் பொறுப்பு.

பிசிராந்: உலகு தொடங்கிய நாளிலிருந்து இன்று வரைக்கும் மேம்பட்டு வருகின்ற சோழர் ஆட்சியின் அடிப்படையிலேயே மாசு ஏற்பட்டு விட்டதா?

உட்கார்ந்: அப்படி ஒன்றுமில்லை.

(தொடரும்)

மாங்குடி மருதனரும் ...

ஆகவே பார்ப்பான் இமயம் வென்று வெற்றிக் கொடி நாட்டிய வீரனையே எவ்வாறு தன்பால் கவர்ந்திழுத்திருக்கிறன் என்பதை உள்ளத்தே உள்ளி நம்மைப் போன்ற சாதாரண மக்களை எவ்வளவு எளிதில் வெல்லும் சக்தி அவர்களுக்கு உண்டு என்பதையும் நினைத்து ஏற்றபடி நடத்தலே சாலச் சிறந்ததொன்றும், என்பது மாடலன் செங்குட்டுவனது நிகழ்ச்சியிலிருந்து நாம் பெறவேண்டிய படிப்பினையாகும்.

உயிர் கிழ்நிலையுறும் என்று மருதனர் மருட்டினரா? நல்வினை தீவினைகட்கேற்ப உனதுயிர் உடலுற்புகும் என்று எச்சரித்தாரா? அல்லது நெடுஞ்செழியனுக்குப் பரிவு காட்டுதல் போல உன்னுயிர் ஏனைய மக்களுயிர் போல் செல்லுவதை நினைக்கும்பொழுது என்னல் பொறுக்கமுடியவில்லை என்றாரா? வேள்வி செய்தல் வேண்டும். பார்ப்பனனைக்கொண்டு செய்தல் வேண்டும். அதுவும் இன்றே செய்தல் வேண்டுமென்றாரா? 87அடிகளில் 30 அடிகளை மாடலன் செங்குட்டுவனை மிரட்டி, அச்சுறுத்தி, பரிந்து கூறியதுபோல 872 அடியில் மதுரைக் காஞ்சியில் ஓரிடத்தாகிலும் இவ்வாறு பொருந்தாக் கூற்றுக்களைக் கூறியிருக்கிறரா? அன்றி "உனது மனைவியிருக்கிருள். அவளுடன் சேர்ந்து நீ வேள்விசெய்" என்று பெண்ணைச் சுட்டிக் காட்டினரா?

இனிய வாசகர்களே! உன்னுங்கள். ஓர்ந்து சிந்தியுங்கள் தண்டமிழ்ப் பெருங்குடி வழிப்போந்த மருதனர் எங்கே? ஆரியவழி வந்த மாடலன் எங்கே? மருதனர் மலையின் கொடுமுடி. மாடலன் மடு. மன்னியுங்கள், மருதனரோடு மாடலனை ஒப்புக்கூற நேர்ந்தமைக்கு.

★

திரைப்பட ஆராய்ச்சி

நாடோடி மன்னன்

ரத்தினபுரியின் ஒரே வாரிசான இளவரசி ரத்தினா காணாமற்போனதால் கவலையில் மூழ்கி மாள்கிறான் மன்னன்.

அமைச்சரும் தளபதியும் மார்த்தாண்டனை மன்னனாக்க முயல்கின்றனர்.

அரசகுரு அருளானந்தரோ மாண்ட மன்னனின் தம்பி பிங்கலனை மன்னனாக்க விரும்பி, மார்த்தாண்டனை மாய்க்க முயல்கிறார். முயற்சி முழுவெற்றி பெறவில்லை. முடிசூட்டு விழாவிற்கு முதல் நாள் மார்த்தாண்டன் மயங்கி வீழ்கிறான்.

எதிர்பாராத வகையில் மார்த்தாண்டனை ஒத்த உருவமுடைய புரட்சிக்குழுத்தலைவன் வீராங்கனைச் சந்தித்த அமைச்சரும் தளபதியும் அவனை மன்னனாக்கி அரசகுருவின் பிடியிலிருந்து நாட்டைக் காக்கின்றனர்.

மயங்கி வீழ்ந்த மன்னனைக் கன்னித்தீவுக்குக் கடத்திச்செல்லுகிறார் அரசகுரு. இறுதியில் வீராங்கனின் முயற்சியால், காணாமற்போன இளவரசியும் மார்த்தாண்டனும் நாடு திரும்புகின்றனர்.

இதுதான் ஏறக்குறைய இருபதினாயிரம் அடியில் படமாக்கப்பட்டிருக்கும் 'நாடோடி மன்னன்' திரைக் கதை.

கதையமைப்பு: படத்தைப் பார்த்துவிட்டு அவர்கள் வெளியிட்டிருக்கும் திரைக் கதையைப் படித்தபின்னரும் மார்த்தாண்டன் யார்? பிங்கலனை விட அவன் எந்தவிதத்தில் அரசுகட்டிலுக்கு நெருங்கியவன்? மக்கள் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கும் வீராங்கன் மன்னனைக்காண விரும்புகிறோம் என்று கூறுகிறானே, அந்த மன்னன் யார்? வீராங்கன் மன்னனாக்கப்பட்ட இரகசியம் சகாயத்துக்கு எப்படித் தெரிந்தது? ஆகிய வினாக்களுக்கு விடை கிடைக்கவில்லை. வீணான பகுதிகளை வெட்டியெறிந்து விட்டு இவ்வகைகளுக்கு இடமில்லாமல் கதையமைப்பை மாற்றியிருக்கலாம்.

முட்டைகளைக் குடித்துவிட்டுச் சகாயம் கோழிக்குஞ்சைக் கக்குவது பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாவிடினும் கொட்டகையைச் சிரிப்பால் அதிரச் செய்கிறது.

ஒலிப்பதிவு: கதையின் தொடக்கத்தில் சிற்சில இடங்களில் உரையாடல்கள் சரிவரப் பதிவு செய்யப்படவில்லை.

ஒளிப்பதிவு: வண்ணக் காட்சிகளில் பல இடங்களில் ஒளிப்பதிவு மட்டமாகக் காணப்படுகிறது.

உரையாடல்கள்: கண்ணதாசனும், ரவீந்தரும் சேர்ந்து எழுதியிருக்கும் உரையாடல்களின் எந்தப் பகுதியும் ரசிகர்களின் மனதிற் பதியக் கூடிய வகையில் இல்லை. 'மோடி செய்யாத மாது சேடியில்லாத ராஜகுமாரி' என்ற பாணியில் அமைந்துள்ள உழமுடியாத கலப்பை, அதிகாரமில்லாத மன்னன் என்பனபோன்ற உரையாடல்களைத் தவிர்த்திருக்கலாம். மேலும், ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கிறது. என்பது போன்ற பிழைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

பாடல்கள்: இப்படத்திற்கு எட்டுப் பேர்கள் பதினான்குபாடல்களை இயற்றியுள்ளனர். தூங்காதே தம்பி ... என்ற பாடலைத் தவிர வேறெதிலும் சொற்சிறப்போ அல்லது பொருட்சிறப்போ காணப்படவில்லை.

இசையமைப்பு: சில பாடல்களுக்கு எஸ். எம். சுப்பையாவும் சிலவற்றிற்கு என். எஸ். பாலகிருஷ்ணனும் இசையமைத்துள்ளனர். சுப்பையாவின் இசையமைப்பு நடுத்தரம். பின்னவருடையது முன்னவரதை விட மட்டம். பொதுவாக எந்தப் பாடலும் உள்ளத்தைத் தொடவில்லை.

ஒப்பனையும் உடையும்: முன்னது குறைகூற முடியாத வகையில் அமைந்துள்ளது. கன்னித்தீவில் கன்னியருக் கணிவிக்கப் பட்டிருக்கும் உடைகள் கண்ணியக் குறைவைக் காட்டுகிறது.

அரங்க அமைப்பு: புதுமை ஏதும் காணப்படவில்லை எனினும் குறைபாடின்றி அமைந்துள்ளது.

நடிப்பு: பானுமதியின் நடிப்பு மனநிறைவளிக்கின்றது. வழக்கத்திற்கு மாறாகத் தன் பேய்ச் சிரிப்பை அடக்கி, அடக்கமாக நடித்துள்ளார் வீரப்பா. தம்பியின் சொந்தப்படம் என்பதற்காகச் சக்கரபாணி வந்து போகிறார். இராமச்சந்திரன் நடித்துள்ளார். நடிப்பில் புரட்சி ஏதுமில்லை. சரோஜாதேவி இனியேனும் நடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களின் நடிப்பைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

பொதுவில்: படத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்பதைக் காட்டிக் கொள்கிறார் ராமச்சந்திரன்.

படம் வெளியாவதற்கு முன்பு 'நாடோடி மன்னனைப்' பற்றி புகழ்ச்சியாகக் கூறப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவில் படம் இல்லை. 'என் தமிழரும் படம் எடுத்தார்' என்ற பட்டியலில் சேர வேண்டிய படத்தில் இதுவும் ஒன்று.

யார் குற்றம்:— திரைப்படமும், பாடல் புத்தகத்தில் வெளியாகியுள்ள கதையும் பிங்கலன் மாண்ட மன்னனின் தம்பி என்ற கருத்தை வலியுறுத்துகின்றன, அப்படியிருக்க அண்ணனின் மகள் ரத்தினா என்பதை அறிந்த பின்னரும் அவளைப் பெண்டாளநினைப்பது எந்நாட்டின் பண்பாடோ, இது திராவிடர் பண்பாடெனக் கூறத் துணியமாட்டார்கள் என்று நம்புகிறோம். இஃது இயக்குநர் குற்றமா? அல்லது கதைத் துறையினர் குற்றமா?

நமக்கொரு உளவு வெளியாகிறது. தி. மு. க. ஆட்களுக்குக் கதையைப் பார்த்துக் கதையும் பாட்டைப்பார்த்துப் பாட்டும் எழுதமுடியும். இந்தக் கதையமைப்பில் கவிஞர் பாரதிதாசன் எழுதிய கருஞ்சிறுத்தையின் வேர்க் கருத்துக் காட்சியளிக்கிறது.

—பாலு

இழி தொழில் உளதோ?

புதுவை, அ. செல்லப்பன்.

உன்னை நேசி! உலகையும் நேசி!
மண்ணக மீதினில் வாழ்ந்திடும் எவரும்
ஒவ்வொரு துறையில் உதவுதல் எண்ணின்
ஒவ்வொரு தொழிலும் உயர்தொழில் எனலாம்.
காடும் மலையும் கழனியுந் திருத்தி
வாடும் பயிர்களை வளமுண தாக்கி
அல்லும் பகலும் அயரா துழைக்கும்
நல்லுழ வன்தான் ஞாலத் துயிராம்!
உழவன் இல்லையேல் உணவைப் பெறுவையோ?
கழிபெருஞ் செல்வனும் களிப்பனோ உணுது?
சொல்லே ருழவரும் துடித்தே மடிவர்
பிள்ளையும் சாம்பசிப் பிணியினை யுற்றே.
காட்டினில் அரசன் — கடுந்தொழில் மறவன்
நாட்டினில் விறகு வெட்டியே நலவாழ்(வு)
ஓட்டுவோன் இன்றேல் உன்னி டமையுமோ?
தேட்ட மிக்குடையனும் திகைத்தே நிற்பான்
மாடமாளி கையும் கூடகோ புரமும்
பீடுற அமைக்கும் பெற்றியன் இல்லையேல்
தங்கச் சிறிதும் தனியிடம் இன்றும்.
தாயும் சேயும் தங்க இயலாது
நாயும் உறங்க நல்லிடம் இலதாம்
தச்சன் இல்லையேல் தரிப்பரோ உலகோர்?
நச்சும் பீடுடை நம்நேச வாளர்
இன்றேல் உலகம் இருத்தலோ அரிதே
அன்றே அழியும் அவனியின் மானம்!
கோடையை மறைக்கக் குளிரைத் தடுக்க
ஆடை தேவை! அவசியம் தேவை!
உலகில் உள்ள ஒவ்வொரு வினைஞரும்
சிலசில துறையில் உதவுதல் தேர்மின்!
ஆதலி னாலே அன்புசால் நண்ப!
பேதமே யில்லை பிறர்க்கும் உனக்கும்
தாழ்ந்தமுட் டாள்உளர் தரணியில் ஆனால்,
தாழ்வுடைத் தொழிலோ தரணியில் இல்லையே!
தொல்லை உலகமோர் தொழிலின் கூடம்
எல்லாத் தொழிலும் எவர்க்கும் உதவும்!
எத்தொழி லாளரும் எவர்க்கும் உதவுவர்!
இத்தரை மீதினில் உணர்வாய் இதனையே!

★

சமூகமே கேள்!

திருச்சி, முதுகண்ணன்.

வாடுகின்ற மாபெரிய சமூக மேகேள்!
மயிலிறகு போடென்றும் போடு மோதான்
தேடுகின்ற வெப்பொருளு முழைப்பா லன்றிச்
சோம்பேறித் தனத்தினால் வந்த துண்டோ?
நீடுகின்ற வெலும்பொடுதோல் தோன்றத் தோன்ற
நீயடங்கி வாழ்வதுன்ற னறிவோ டாற்றல்
மூடுகின்ற நயவஞ்சக் காரர் தந்த
மூடமதி யெனநினைந்தால் முடியா தேயோ?

பண்டொருநா ளில்லாத சாதி தன்னைப்
படைத்திந்த நாட்டினிலே பயிலச் செய்து
கொண்டிருந்த தல்லாம லின்றுந் தன்வாய்
கூசாம லிருக்கின்ற தென்பான் றன்னைக்
கண்டிருந்த — இருக்கின்ற பிழையா லன்றோ?
கருகியது தமிழர்களின் காசில் வாழ்வு
வண்டிருந்த கருவிழியார் புலியே றன்ன
மறத்தோளார் சிந்திப்பார், வளஞ்செய்வாரே!

★

தொண்டு செய்ய வாரீர்!

—ㅇ தஞ்சை, தமிழ்மணி ㅇ—

நாட்டிற்கு நல்லதொண்டு செய்ய வாரீர்!
நலங்காக்க, மக்கள்துயர் துடைக்க வாரீர்!
காட்டைப்போ லடர்ந்திருக்கும் ஊழல் தன்னைப்
களைந்துவிட்டுப் புதுப்பாதை அமைக்க வாரீர்!
ஏட்டளவில் காட்டுகின்ற திறமை விட்டே
எழுந்திடுவீர்! செயல்படுவீர்! வெற்றி காண்பீர்!
நாட்டைவிட்டு நாடுசென்று வாழ்வு தேடும்
நம்மினத்தார் வாழவழி வகுக்க வாரீர்!

வீட்டினிலே வறுமைப்பேய் சூழ்ந்தி ருக்க
விளைவுக்கே உழைத்தும்நல் வாழ்வு காணாப்
பாட்டாளி வர்க்கமெல்லாம் செழுமை கொள்ளும்
பாதையினைத்தேர்ந்தெடுக்க எழுந்து வாரீர்!
ஓட்டைகளே மலிந்துள்ள ஆட்சி தன்னை
ஓட்டிவிட்டு நல்லாட்சி அமைக்க வாரீர்!
ஆட்டிவைக்கும் வடவர்க்குப் பணித லின்றி
அவலநிலை அகற்றிடவே வாரீர்! வாரீர்!!

★

குயில்

Regd. No. M. 7030.

உழவன் முதற்கேள்வி

விடியற் காலை வேளை — தனில்
விரிந்த தென்னம் பாளை
கடலிலெல்லாம் காட்டி லெல்லாம்
தூவிற்றுப் பொன் தூளை

கடிய நடந்து கொண்டு — கையில்
காளை மாடி ரண்டு — கூட்டிக்
கழனியிலே ஏரிற் பூட்டி
துவக்கினேண்டி தொண்டு

இப்போது மணி ஒன்று — நான்
ஏரைக் கட்டி நின்று — நல்ல
கொப்புக் காரி எதிர்பார்த்தேன்
நீவருவாய் என்று

பப்பளி வன்னச் சேலை — இரு
காதில் இழைத்த ஓலை
இப்படி அப்படிப் பளபளத்ததைக்
கண்டேன் எதிர் மூலை

கொண்டு வந்தாய் சோறு — மீன்
குழம்பு மிளகின் சாறு — நீ
அண்டை யில் வை நம் தெருவில்
நடந்த தென்ன கூறு

தண்டமிழர் ஆள — நம்
தமிழ் நாடு மீள — நல்ல
தொண்டு செய்தவ ரைச்சிறைக்குக்
கொண்டா போனுர் நீள?

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன் புதுச்சேரி.
அச்சிடுவோர் : மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.